


# உங்கள் தலையெழுத்து, விதி மாறவேண்டுமா?

இப்புத்தகம் உங்கள் எதிர்காலத்தை 100% மாற்றும்



இந்த புத்தகம் ஆவியுலகத்திலிருந்து

எனக்கும், பிரச்சனை என்று

வருபவர்களுக்கும்....

உதவி செய்து வரும்

என் தந்தை – திரு. ராஜீ ஆச்சாரி

அவர்களுக்கு சமர்பணம்



# அதிர்ஷ்டம் அழைக்கிறது!

உலக இன்பங்கள் உங்களுக்கு மறுக்கப்பட்டு விட்டதா?
திறமைக்கு ஏற்ற அதிர்ஷ்டம் இல்லையா?
தொழிலில் — பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய
ஆசைப்படுகிறீர்களா?!!

வேலை இல்லாத பிரச்சனையா?!!
எவ்வளவு முயற்சி செய்தும் — முன்னுக்கு வர
முடியவில்லையா?

திருமணம் தாமதப்படுகிறதா?!!
மதிப்பு மரியாதை கிடைக்கவில்லையா?
இனி வாழ்ந்து — பிரயோஜனம் இல்லை என்று நினைக்க
ஆரம்பித்து விட்டீர்களா?

தன்னம்பிக்கை இல்லையா?
தற்கொலை உணர்வு ஏற்படுகிறதா?
எதிர்பாராத விபத்து ஏற்பட்டு விடுமோ என்று
பயப்படுகிறீர்களா?!!

குழந்தை இல்லாப் பிரச்சனையா?!!
காதல் பிரச்சனையா?
கோர்ட் — கேஸ் என்று அவதிப்படுகிறீர்களா?
வியாபாரம் சரியில்லையா?

உங்கள் விதி என்ன? உங்கள் விதியை பரிகாரம்
மூலம் — மாற்றக் கூடியதுதானா?! அல்லது
கடைசி வரை இப்படிதானா? என்பதை
முன்கூட்டி அறிந்து!

**தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுத்து...**
**பிரச்சனை நீங்கி சுகமாக வாழ**
**சந்தியுங்கள்**

**கேரளாவை சேர்ந்த அமானுஷிக துறை**
**ஆராய்ச்சியாளர் திரு. ஆர்.பி. ஹரி அவர்களை!!!**

உங்கள் விதியே மாறி போகும்!
உங்களின் பல புதிர்களுக்கு விடை?!!

**ஆர்.பி. ஹரி**

# எதிர்காலத்தை மாற்றும்-ரகஸ்ய முறைகள்

உங்கள் தலையெழுத்து, விதி மாறவேண்டுமா? என்ற தலைப்பில் வெளிவந்த புத்தகத்தின் மூலமும்,சில பத்திரிக்கைகள் மூலமும்,...

''ஆவிகள் எதிர்காலத்தை மாற்றியமைக்க உதவுகின்றன''

''தூக்கத்தின் பொழுது-நம்முடைய ஆன்மா நம் முன்னேற்றத்திற்காக செயல்படுகின்றன''

''உள்மனதில்-ஒரு காரியத்தை பற்றி கற்பனை செய்தால்''

அது பலிதமாகும் போன்ற கருத்துகள் செயல் முறைகள் யாவும்...... சுற்று வட்டாரங்களில் பிரபலமாக துவங்கியதும்,...

பலதரப்பட்ட மனிதர்களின்,பிரமுகர்களின் தொடர்பு களும், அவர்களின் பிரச்சனைகளை தீர்கவும், முன்னேற்றங்களை ஏற்படுத்தவும் வாய்ப்பு கிடைத்தது.

நூதனமான முறைகளில்-ஏற்படும் பிரமிக்கும் படியான மாற்றங்களும், முன்னேற்றங்களும்... நாத்திகர்களையும், இளைஞர் களையும், பகுத்தறிவாளர்களையும் என்னை சந்திக்கும் படி செய்தது.

## விதியை மாற்ற முடியுமா?

விதிபடிதான் எல்லாம் நடக்கும் என்று கூறி ஜாதக பலன்களை கூறி வந்த நான், தீயபலன்களையும் பகிரங்கமாக கூறி,எச்சரிக்கை செய்வதை தவிர அதிலிருந்து தப்புவதற்கான வழிமுறைகளை... சொல்ல தெரியாமல் ஆரம்பகாலங்களில் தவித்து இருக்கிறேன் .

விதி என்று கூறி-நாம் ஒரு கற்பனையான எல்லை கோட்டை நிர்ணயம் செய்து வைத்து கொண்டிருக்கிறோம். அதை மீறி...... காரியங்கள் நடந்துவிட்டால்....

விதியை-மதியால் வென்றுவிட்டதாக கூறிக்கொள்கிறோம் உண்மையில்-

விதியின் எல்லை கோடுகள்..... விதிக்குட்பட்டு வெவ்வேறு கால அளவுக்குட்பட்டது என்பது தான் உண்மை.

அதை புரிந்து கொள்ளாதவரை-

விதியை-மதியால் வென்று விட்டதாக யாரும் கூறிக் கொள்ள முடியாது.

விதி என்று கூறி...செயலற்று இருக்கவும் கூடாது.

மரணம் கூட விதியின் கடைசி எல்லைகோடு ஆகாது.

## ஜோதிட விதியை-மாற்றுவது சாத்தியமே!

ஜாதகத்தில்-லக்னத்தில் சூரியன் இருந்தால் கண்குருடாகும் என்பது ஜோதிட விதி:அதன்படியே லக்னத்தில் சூரியன்... இருக்கும்படி பிறந்த ஒருவர்...சிறு வயது முதலே பார்வை கோளாறு ஏற்பட்டு கண்ணாடி அணிந்தார்.சமீபத்தில் அவர் கண்களுக்கு லேசர் ஆப்பிரேஷன் செய்து கொண்டு, கண்ணாடியை தூக்கி எறிந்தார்...பார்வை குறைவு நீங்கிவிட்டது.

இங்கு ஜோதிட விதியை,மருத்துவ விஞ்ஞான விதிகள், வென்று விட்டது.

## ஆவிகளும்,மனோசக்தியும்...விதியை மாற்றுமா?

ஜாதகப்படியான-பலன்களை மாற்றியமைக்க கூடிய சக்திகள் மனோசக்திக்கும்,ஆவிகளுக்கும் உண்டு என்று கூறி,...மிக சாதாரண நிலையில் இருந்த பலரை சமூகத்தில் மிக உயர்ந்த நிலைக்கும்,வசதியான நிலைக்கும் என்னால்...கொண்டு செல்ல முடிந்தது (மேலும் ஆதாரங்கள் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவும்) மிக மிக ஏழ்மையான சூழ்நிலையி நந்து, என்னை யும் விடுவித்து கொள்ளமுடிந்தது.

சினிமா துறையில் உள்ள சில பிரமுகர்கள்(சில வருடங்கள் முன் சாதாரண நிலையில் இருந்து, என் ஆலோசனை படி செயல்பட்டவர்கள்)

தற்சமயம் முன்னனியில் உள்ளனர்

ராஜ்கிரன் நடித்து வெளிவந்த ''மாணிக்கம்'' படத்தின் டைரக்டர் K. V. பாண்டியன் அவர்கள் என்னை சந்தித்து சில

நாட்களில் ஆவிகளின் உதவியால்.....திடீர் என்று டைரக்டர் ஆகும் வாய்ப்பு கிடைத்தும் .... சில விஷயங்களை பின்பற்ற தவறியதால் ..... மேலும் முன்னேறும் வாய்ப்பு தவறியது.



நடிகர் வடிவேலு அவர்களின் மேனேஜர்க்கு நான் குறிப்பிட்ட நல்ல காலத்தின் படி, நடிகர் வடிவேலு அவர்களே ஒரு வீடு (Flat) வாங்கி கொடுத்தார். நடிகர் வடிவேலும் சில விஷயங் களுக்காக என்னை சந்தித்தவரே.

சினிமா,அரசியலை வைத்து, இக்கலைக்கு மவுசை ஏற்படுத்த விரும்பாததால்.....சாதாரண நடுத்தர மக்களின் பிரச்சனைகளை தீர்த்த விஷயங்களையே அதிகஅளவில் ஆதாரங்களுடன் வெளியிட்டு ......சாதாரண நடுத்தர வர்க்க மக்களும்-சில விஷயங்களை பின்பற்றுவதன் மூலம் முன்னேற்றம் அடைய முடியும் என்பதை காட்டுவதே என் முக்கிய நோக்கமாகும். அரசியலில் சில பிரமுகர்கள் தங்களுடைய சந்திப்பையும் அதன் மூலம் ஏற்பட்ட முன்னேற்றத்தையும், நன்மைகளையும் ரகஸ்யமாக வைக்கும்படி கேட்டுக்கொள்வதால் சிலவிஷயங்களை வெளியே சொல்ல முடிவதில்லை என்பது வேறுவிஷயம்.

## மல்லிகை பூவிற்கு — விளம்பரம் அவசியமா?

இந்த அமானுஷிக சக்தியை பற்றிய செய்தியை,- சன் டிவி, விஜய் டி.வி போன்றவற்றிலும், பிரபலமான பத்திரிகைகளிலும் பேட்டி கொடுக்கும்படியும், விளம்பரம் கொடுக்கும்படியும் கூறி பலர் அணுகினார்கள்.

இதற்கான செலவுகளை ஏற்றுக்கொள்ளவும் சில பிரமுகர்கள் (இக்கலைமூலம் பயன் அடைந்தவர்கள்) தயாராக இருந்த போதிலும். ஏனோ என் மனம் இதற்கு உடன்படவில்லை (ஒரே நேரத்தில் பலரை சந்திக்கவும், பலருடைய பிரச்சனைகளை ஏற்றுக்கொள்ளவும் என்னால் இயலாத காரியமாகிவிடும்)

மேலும் — அதிர்ஷ்ட சாலிகளாக மாற வாய்ப்புள்ளவர்கள் தான், ஏதோ ஒரு வகையில் விஷயம் கேள்விபட்டு, என்னை அணுகிவருகிறார்கள் இதிலும், **தங்கள் அதிர்ஷ்டத்தை உறுதி**

**படுத்தி கொள்பவர்களால் மட்டுமே—நான் குறிப்பிடும் பரிகாரமுறைகளை செய்யும் வாய்ப்பும் ஏற்படுகிறது.**

ஆரம்ப காலங்களில்—எனக்கு இத்துறையில் ஈடுபடும் எண்ணம் இருக்கவில்லை—ஆசிரியர் பயிற்ச்சி முடித்தவுடன் ஏதாவது ஸ்கூலில் டீச்சராகி விடலாம் என்று தீவிர முயற்சியில் ஈடுபட்டபொழுது தான்....விளையாட்டாக ஆவிகளுடன் தொடர்பு கொள்ளும் பயிற்ச்சிபெற்று,

ஆவியுலக ஆராய்ச்சி சங்கத்தின் மூலமாக—

ஏராளமானவர்களுக்கு ஆவிகளுடன் தொடர்பு கொள்ளும் முறைகளை பற்றி பயிற்சி கொடுத்தேன். இதனால்...

சக்திவாய்ந்த சில ஆவிகளின் தொடர்புகளும்—உதவிகளும் எனக்கு கிடைக்க துவங்கின...இதனிடையில் என் தந்தையாரும் இறந்துவிடவே அவருடைய...ஆவியின் தொடர்பும் எனக்கு அசுர பலத்தை ஏற்படுத்தியது.

என்னை சுற்றி...அரூபமான ஆவிகளின் நடமாட்டமும்,

பாதுகாப்பு வளையம் போல் இருப்பது போல உணர ஆரம்பித்ததும் தான் மற்றவர்களின் பிரச்சனைகளை தீர்க்க முயற்ச்சி செய்து,.....படிப்படியாக வெற்றிகளை சந்திக்க துவங்கியதும்,....

பயன் அடைந்தவர்களின் நண்பர்களும், உறவினர்களும் என்னை தேடி வர துவங்கினார்கள். இப்படியே.....விளம்பரமே இல்லாமல் என் கருத்துகளும் (ஆவிகளின் வழி வந்த கருத்துகள்) செயல் முறைகளும் சுற்று வட்டாரங்களில் பரவ துவங்கியது. இதனால் எனக்கு விளம்பரம் செய்யவேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஆனாலும்......

பயன் அடைந்தவர்கள்—ஒரு சிலரின் கட்டாயத்தின் பேரில் ஆவிகளின் கருத்துகளை பற்றி செயல் முறைகளைப் பற்றி விளக்கமாக புத்தகவடிவில் வெளியிட வேண்டி வந்தது.

புத்தகம் வெளியிடுவதற்கான—முழு செலவுகளையும் விஜயராஜ் என்பவர் ஏற்றுக்கொண்டார்.

**இப்புத்தகம்—அதிர்ஷ்டமுள்ளவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்பது விதியாக இருக்குமானால் நீங்களும்—அதிர்ஷ்டசாலிகளே.**

## உங்கள் எதிர்காலம்... மிக மிக அதிர்ஷ்டகரமாக அமையவேண்டுமா?

வாழ்க்கையில்—எந்த சம்பவங்களும் திடீர் என்று நடப்பதில்லை. விதை—முளைவிட்டு, செடியாகி,...மரமாவது போல், வாழ்க்கையில் ஏற்படும் எல்லா சம்பவங்களுக்கும்....ஒரு மூலகாரணம் (விதை) கண்டிப்பாக உண்டு.

விதைக்கு—முன்பு ஒரு பொருள் உண்டு.

அதை கண்களால் பார்க்க முடியாது...காதால் கேட்க முடியாது, தொட்டு உணரமுடியாது—முகர்ந்து பார்க்க முடியாது ,...ருசித்து பார்க்கவும் முடியாது—**அதுதான் ''காலம்'' (நிகழ்காலம்)**

காலம்....வார்த்தைகளால் விளக்க முடியாத ஒன்று.

காலம்.....இறைவனின் அம்சங்கள் அடங்கியது

சகலவிதசக்திகளும்....காலத்திற்குள் அடக்கம்

எந்த ஒரு பொருளையும், சம்பவங்களையும், இயக்கங்களையும் உயிர்களையும், ஆன்மாக்களையும் காலத்திலிருந்து பிரிக்கமுடியாது

காலத்திற்குள்—சகலமும் அடக்கம். வெற்றி, தோல்வி—இன்பம், துன்பம் எல்லாமே—எல்லாமே! அடக்கம். காலம் ஆதியும் அந்தமும் இல்லாதது.

**காலத்தை வசப்படுத்தினால்...**
**லட்சியங்களில் வெற்றியையும்—வசதியான**
**வாழ்க்கையையும் அடையலாம்!!**


**காலத்துடன் இணைந்தவர்**

என்ன வேண்டும்?! உங்களுக்கு—காலம் உங்களுக்கு எல்லாவற்றையும் தருவதற்கு தயாராக உள்ளது.

ஆடம்பரமான வாழ்க்கை வேண்டுமா?

லட்சியங்களில் வெற்றி வேண்டுமா?

எது வேண்டும்? எப்பொழுது வேண்டும்?

முடிவு செய்யவேண்டியது...நீங்கள் தான்!

நீங்கள் மட்டுமே - உங்கள் விதியை முடிவு செய்யக்கூடிய தகுதி உள்ளவர்கள். ஆனால்...

முடிவு செய்யும் காலம் - நல்ல காலமாக அமைய வேண்டும். ஆம்!

காலத்தில் - நன்மை, தீமை உண்டு, - பாசிட்டிவ், நெகட்டிவ் உண்டு, இன்பம், துன்பம் யாவும்... சகலமும் உண்டு.

நல்ல காலத்தில் - முடிவு எடுத்தல், கற்பனை செய்தல், ஆசைபடுதல், முயற்சி எடுத்தல் யாவும் 100% பிரமிக்கும் படியான நல்ல பலனை தரும்.

## காலத்திற்கு ஈடான—சக்தி உங்கள் உள்மனதிற்கும் உண்டு

நமது—மனதிற்கு அநேக சக்திகள் உண்டு காலத்திற்கு சொல்லப்பட்ட அனைத்து தன்மைகளும் நமது மனதிற்கு உண்டு.

**காலத்தை விட வேகமானது...நமது மனோவேகம் எதையும் சீக்கிரமாக அடையவேண்டும் என்று நினைக்கிறது நமது மனம்.**

காலத்தின் வேகத்துடன்—நமது மனோவேகமும் சரிசமமாக இணையுமானால்...ஆச்சரியமான சம்பவங்களும், பிரமிக்கும் படியான முன்னேற்றங்களும்—அதிசயமான சக்திகளால் அற்புதங்களும் நிகழும்.

இதையே—இறைநிலை என்று சித்தர்கள் குறிப்பிடுகிறார்கள் நினைத்ததை சாதிக்கும் சக்தி இங்குதான் ஏற்படுகிறது

மனதை ஒருமுகபடுத்துவதாலும், தியானம் செய்வதாலும், கவனம் சிதறாமல் ஒரே **குறிகோளில்** நிலையாக நின்றாலும் காலத்துடன்—இணையமுடியும்.

காலத்துடன் இணையும் சக்தி—ஆவிகளுக்கு உண்டு. இதனால் தான்—ஆவிகளால் அற்புதங்களை நிகழ்த்த முடிகிறது.

## காலத்தை சாதகமாக—செயல்படுத்த சில ரகஸ்ய வழிமுறைகள்

இதுவரை வாழ்ந்த வாழ்க்கை எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்—இனிமேலாவது காலத்தை வசபடுத்தி, விரும்பிய வாழ்க்கையை அடைய முயற்சி செய்வோம்.

'காலம்'—உங்களுக்கு எல்லாவற்றையும் தர தயாராக உள்ளது.

திடீர் என்று—ஒரு ஆசை மனதில் தோன்றும் காலத்தை (நேரத்தை) அனுசரித்து,.....அந்த ஆசை நிறைவேறும் அல்லது ஆசை மனதில் தோன்றிய நேரம் சரியில்லாவிடில் அந்த ஆசை நிறைவேறாது.

(தொடர்ச்சியாக நல்லதையே நினைத்துக் கொண்டு இருந்தால்...நல்லகாலம் கெட்டகாலம் என்று தரம்பிரிக்க வேண்டியதில்லை)

மனம்—நிகழ்காலத்திலேயே கவனம் செலுத்தினாலும் காலத்துடன் இணையமுடியும். அத்துடன் - உங்கள் வாழ்க்கையை கடிகாரம் கட்டுப்படுத்த கூடாது. ''நேரம் ஆகிவிட்டது கிளம்பு... கிளம்பு...என்று நிமிஷ முட்கள் உங்களை குத்தக்கூடாது.

உங்களை அழித்துவிடும் அளவிற்கு காலத்தோடு போராடாதீர்கள்...காலத்துடன் இணையுங்கள் - அமைதியாக இணைந்து விடுங்கள்....பொறுமையாக இணைந்து விடுங்கள். காலத்துடன் போராடினால்! நீங்கள் தளர்ந்து போய், நோய் வாய்ப் பட்டு சகலமும் இழந்து விடுவீர்கள். ஆகையால் காலத்துடன் போராடாதீர்கள் - காலத்துடன் இணையுங்கள். சாதனை புரிந்தவர்கள் கடிகாரத்தோடு போராடவில்லை.

## சில பரிசோதனைகளும் - வெற்றி அடைந்தமுறைகளும்

மிக துல்லியமாக அதிர்ஷ்ட காலத்தை தேர்ந்தெடுத்து, அந்த நேரத்தில் ஒருவருடைய மனதில் ஆசைகளை தூண்டிவிட்டால், கற்பனைகளை விதைத்தால்—எதிர்கால பலன்கள் கூறினால்,.... அவைகள் அப்படியே பலிப்பதை பலமுறை ஆராய்ந்து பார்த்து, ஆச்சரியமும் வியப்பும் அடைந்து—, வேறு பல விஷியங்களில் இதை பயன்படுத்தி வெற்றி அடைந்தேன்.

ஒரு சமயம், ஜாதகமே இல்லாத ஒருவர்....எனக்கு ஏதாவது நல்ல பலன்கள் கூறுங்களேன் என்று, என்னை காணவந்தார்.

அவருடைய சூழ்நிலைகளை புரிந்து கொண்டு,

ஒரு சிறிய பேப்பரில்—சில முக்கிய விஷயங்களை எழுதி நல்லநேரம் தேர்ந்தெடுத்து, (இரவு மணி 12-10 அளவில்) அந்த நேரத் தில்....இந்த பேப்பரில் உள்ளதை படித்து பார்க்கவும் என்று கொடுத்து அனுப்பினேன்.

ஏழு மாதம் கழித்து,—அந்த நபரை சந்திக்கும் சூழலில்—நான் எழுதி கொடுத்த விஷியங்கள் அனைத்தும் பலித்ததாக கூறினார்

நான் ஜாதகத்தை வைத்து அவருக்கு பலன் கூறவில்லை மனதில் தோன்றியதை, நல்ல வார்த்தைகளை தேர்ந்தெடுத்து எழுதி கொடுத்தேன்—

நான் எழுதிய பலன்கள்—அவர் மனதில் பதிந்த நேரம் தான் மிக முக்கியமான நேரமாகும்.

இந்த காலத்தை நான்—என் பரிகார முறைகளில் பல வழிகளில் இணைத்து வெற்றி அடைந்துள்ளேன்.

## கஷ்ட காலத்திலிருந்து விடு பட வேண்டுமா?

துரதிர்ஷ்டம் பிடித்தவர்களின் பலருடைய வாழ்க்கையை காலத்தை அனுசரிக்கும்படி செய்து, சில வருடங்களில் பிரமிக்கும்படியான மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் ஏற்படுத்தி தந்து இருக்கிறேன்.

சில வருடங்கள் முன்பு நான் குறித்து கொடுத்த நேரத்தில் தாலிகட்டியவர்கள் பலர்—இன்று மேலும், மேலும் வசதியான நிலைக்கு உயர்ந்து வருவதை அடுத்த புத்தகத்தில் ஆதாரங்களுடன் எழுத உள்ளேன்.

என்னுடைய பரிகார முறைகளில் சில—காலத்தை அனுசரிப்பதால்—செய்பவர்களின் மனோவேகத்திற்கு ஏற்றபடி உடனடி பலன் தருவதில்லை. அதனால் தான் என் பூஜை முறைகள்—ஒரு வருடம் வரைக்கும் செய்யும்படியான சூழல் ஏற்படுகிறது. பத்து, பதினைந்து வருடங்களாக ஒரே விதமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தவர்களை—இரண்டு, மூன்று வருடங்களில்.

அவர்களின் வாழ்க்கை தரத்தை அடியோடு மாற்றி மிக குறிப்பிடும்படியான நிலைக்கு உயரும்படி செய்துள்ளனே—

அடுத்து-

பெயர் மாற்றம் செய்தால்—வாழ்க்கையில் மாற்றங்கள்
ஏற்படுவது உண்மை என்று நிரூபிக்கபட்டாலும்

என் வழிமுறைகளின் படி—

நான் மாற்றியமைக்கும் புதிய பெயர்—பெயர் மாற்றம் செய்து கொள்பவரின் மனதில்—முதன்முதலாக பதியும் நேரமே (இரவு 12 மணி ஆனாலும்) பிரதானமாக செயல்பட்டு, மாற்றபட்ட பெயரின் பலன்களை வாரி வழங்கும் என்பது விதியாகும்.

மற்றபடி—புத்தகங்களை படித்து விட்டு பெயர் மாற்றம் செய்வதோ. ஒருவருடைய எதிர்காலத்தை பற்றி—ஒன்றுமே தெரியாத நிலையில் பெயர் மாற்றம் செய்து கொடுப்பதோ— எவ்வித பலனும் தராது. **(பெயர் மாற்றம் செய்து கொடுக்கும் - மிக பிரபலமான நியுமராலஜிஸ்ட் பலருக்கு எதிர்காலம் பற்றி சொல்ல தெரியாதது துரதிர்ஷ்டமே)**.

என் முறைபடி—மாற்றபட்ட பெயர் எப்பொழுதிலிருந்து பலன் தரும் என்பதையும் சொல்ல முடியும். காரணம்?
காலத்தை முழுமையாக அனுசரிப்பதால்
காலத்தை குறிப்பிடுவதும் சாத்தியமே!

அதிர்ஷ்ட கல் அணிவதற்கும்—வாங்குவதற்கும் நிமிட கணக்குவரை காலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இல்லாவிடில் முழு பயன் அடைவது 100% முடியாத காரியமே. (மிகவும் விரிவாக எழுதமுடியாத காரணத்தால் இதைபற்றி இத்துடன் நிறுத்தி கொள்கிறேன்) **நல்ல காலம் - உங்களை வரவேற்கிறது அதிர்ஷ்டகரமான வாழ்க்கையை - வாரி வழங்குவதற்கு.**

## எதிர்காலத்தை மாற்றியமைக்கும் அமானுஷிக சக்திகள்

**மே 1996ல் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில்— வருமானமே இல்லாத சூழ்நிலையில்....**நான் திரு ஆர்.பி. ஹரி அவர்களை சந்தித்தேன் ஜாதகம் இருக்கிறதா? என்று கேட்டார் —

ஜாதககுறிப்புகள்—எதுவும் என்னிடம் இல்லாததால்...வேறு எதாவது முறையில் எனக்கு உதவும்படி கேட்டுக்கொண்டேன் சில தினங்கள் கழிந்து வரும்படி கூறினார்.

அதன்படியே மீண்டும் சந்தித்தேன்.

ஒரு தேதியை குறிப்பிட்டு....அந்த நாள் முதல் உன் நிலமையே மாறும் என்று கூறி, சில பூஜை, வழிபாடு முறைகளை செய்யும்படி கூறினார். அதன்படியே செய்தேன் — அவர் குறிப்பிட்ட தேதியிலிருந்து, ஆச்சரியபடும்படி... தொழில் முன்னேற்றம் மிக குறிப்பிடும்படி அமைந்தது. ஸ்டேடஸ் உயர்ந்தது—நடந்து சென்று அவரை சந்தித்து வந்த நான், July 1997ல் பூஜைக்கான கடைசி தவணை தொகையை கொடுக்க மாருதி 800 காரில் சென்று, சந்திக்கும்படி சுழல் வந்தது—ஆம்!! **நான் சொந்தமாக மாருதிகார் வாங்கும் அளவிற்கு என் நிலமை மாறிவிட்டது.**

**Prop. S-KUTTAPPAN**
**Right Fab Engineering 11, 2nd Floor Sri VengeswararNagar, 3rd Cross Street, Vadapalani - Cehnnai - 26.**

## தமிழ் நாட்டின் இணை போக்குவரத்து ஆணையரின்—அனுபவம்

நானே... ஜாதகம் பார்ப்பதில் ஓரளவு அனுபவம் உள்ளவன். ஏகபட்ட ஜோசியரை பார்த்தும் விட்டேன்... யாரும் என் பதவி உயர்வை பற்றி துல்லியமாக கூறியதில்லை.

பதவி உயர்வு கிடைக்காமலே. என் பதவிக்காலம் முடிந்து விடும் என்று நினைத்துக் கொண்டிருந்த சமயத்தில். July 1996, ல்




திரு R.P.ஹரி அவர்கள் — **NOVEMBER 1996ல் எனக்கு Joint Transport Commissioner ஆக பதவி உயர்வு ஏற்படும் என்று கூறினார்.**

அதன்படியே — யாருமே எதிர்பாராத நிலையில்

22-November 1996ல் **எனக்கு... தமிழ் நாட்டின் RTO Joint Commissioner ஆக பதவி உயர்வு கிடைத்தது.**

**M. SETHU RAMAN**
Joint Transport Commisioner3/45 Indian Bank Colony,Narayanapuram,Madurai - 14

## இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் இயற்கையின் சக்திகள்



1996ல் — வேலை தேடி....சொந்த ஊரைவிட்டு வந்து, சென்னையில் சரியான வேலை இல்லாமல் — அலைந்து கொண்டிருந்த நேரம். இன்ஜினியரிங் படித்துவிட்டு....தகுதிக்கேற்ற வேலை, சம்பளம் கிடைக்காத சூழலில் திரு. ஆர்.பி.ஹரி அவர்களை பற்றி கேள்விபட்டு, அவரை சந்தித்தேன்.

சில பிரார்த்தனை முறைகளையும் **(முஸ்லீம் சமூகத்திற்கு ஏற்றபடி மாற்றியமைத்து)** பூஜை முறைகளையும் கடைபிடிக்கும் படி கூறினார்.

இரவில் தூங்குவதற்கு முன்—ஐந்து நிமிட பிரார்த்தனை செய்யும்படி கூறினார். செய்வதற்கு மிக எளிதாக இருந்தது.

பிரார்த்தனை செய்துவிட்டு தூங்கினால்—தூக்கம் அடித்து போட்டது போல் வரும்—

காலையில் எழுந்திருக்கவே முடியாது. **இரவில் தூக்கத்தில் என்னுடைய ஆன்மா என் முன்னேற்றத்திற்காக செயல்படுகிறது** என்று விளக்கம் கூறினார் ஆர்.பி.ஹரி. ஒரு வருடத்தில் என் வாழ்க்கையை மாற்றி காட்டுகிறேன் என்று கூறினார். அதன்படியே—என் வாழ்க்கை மாறியது. எனக்கு இப்பொழுது உலகத்தின் அனைத்து சுகங்களையும் வாரி வழங்கும் **சொர்கலோகமான குவைத்தில் மிக அதிகமான சம்பளத்தில் வேலை கிடைத்துவிட்டது** அங்கு செட்டில் ஆகும் சுழலும் உருவாகி வருகிறது.

காதர் மொய்தீன்
33 பரதர் வடக்கு தெரு, பேட்டை,
திருநேல்வேலி - PINCODE 627004

## அமெரிக்கன் கான்சலேட்டில் ஆவிகளின்-அதிரடி நடவடிக்கை



சென்னை, அமெரிக்கன் லைப்ரரியில்...25 வருஷமாக செக்யுரிட்டிகளுக்கு தலைமை வகித்த என்னை, தனிபட்ட விரோதம் காரணமாக—OCT 25/1996ல் V. தியகராஜன், அட்மினிஸ்ட்ரேஷன் ஆபிசர் என்னை வேலையை விட்டு நீக்கிவிட்டார்.

ஒரு தவறும் செய்யாத என்னை வேலையை விட்டு நீக்கியதில் அதிர்ச்சி அடைந்தேன்.

இதனால்—பழிவாங்கும் எண்ணம் இல்லாவிடினும் எனக்கு நியாயம் கிடைக்க வேண்டி, திரு ஆர்.பி.ஹரி அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி பிரார்த்தனை செய்தேன்.

என்ன ஆச்சரியம்-!?

என்னை வேலைநீக்கம் செய்த ஒரு மாதத்தில் அமெரிக்கன் தூதரகத்தில் மாதம் 40-ஆயிரத்துக்கு மேல் சம்பளம் வாங்கும் No.1 ஆபீசரான V.தியாகராஜன் எதிர்பாராத விதத்தில் ஊழல் லஞ்சம்

ஆகிய பிரச்சனைகளில் சிக்கினார். இதனால் அவரும் வேலை நீக்கம் செய்யபட்டார். ஆம்!! ஆவிகளின் அதிரடி நடவடிக்கைக்கு இது ஒரு சான்று.

(பின்குறிப்பு—என்னுடைய பிரார்த்தனை முறைகளை உபயோகபடுத்துபவர்கள் எதிர்கால வாழ்க்கை நன்கு அமைய வேண்டும் என்ற குறிகோளில் சக்தியை உபயோகிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நற்காரியங்களுக்கு உபயோகப்படும் சக்திதான் வீரியமும், வலிமையையும் அடைந்து, எதிர்கால சுபீட்சத்திற்கு வழிகாட்டும்)

R.P. ஹரி

## திருமண வாழ்க்கையில் — பிரச்சனையா?



ஜாதகத்தில் தோஷம் இருப்பது தெரியாமல்—திருமணம் செய்து கொண்டதில் ஏகபட்ட பிரச்சனைகள் ஏற்பட்டு **3 மாத வாழ்க்கையோடு என் திருமண உறவு விவாகரத்தில் முடிந்தது.**

வாழ வெட்டியாக—என் மூத்த சகோதரி வீட்டில் தங்கியதில்.....மூத்த சகோதரிக்கு குழந்தை இல்லாத காரணத்தை காட்டி, என்னை இரண்டாவதாக திருமணம் செய்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று....சகோதரியின் கணவர் பிரச்சனை களை ஏற்படுத்தவும்...—

**என்னால் என் சகோதரியின் வாழ்க்கையிலும் பிரச்சனைகள் விஸ்வரூபம் எடுத்தது.**

இதனால் தற்கொலை செய்து கொள்ள முடிவு எடுத்த பொழுது தான் Dec 1995ல், திரு ஆ.பி.ஹரி அவர்களை பற்றி கேள்விபட்டேன். அவரை சந்தித்ததில், சில பரிகாரங்களை பற்றி விளக்கி கூறி...எனக்கும் மிக நல்ல எதிர்காலம் அமையும் என்று கூறி, Feb 1997ல் எனக்கு இரண்டாவது திருமணம் நடக்கும் என்று கூறினார். முதல் திருமணத்திற்கே பலர் சிரமபடும்பொழுது —

எனக்கு எங்கே இரண்டாவது திருமணம் நடக்க போகிறது என்று நினைத்தேன். ஆனால். திரு ஹரி அவர்கள் கூறியபடியே **20Feb 1997ல் எனக்கு இரண்டாவது திருமணம் நடந்தது.**

குழந்தையும் தங்கியுள்ளது.

**மூத்த சகோதரியின் சென்னை விலாசம்**
கலைசெல்வி ராமச்சந்திரன்
C/o விஜயா
16 தலையாரி தெரு
ராயப்பேட்டை
சென்னை.14

கலைசெல்விராமச்சந்திரன்
வடக்கு தெரு
தெலுங்கன்குடிகாடு
ஒர்த்த நாடு

## திருமண வாழ்க்கையில் — திடீர் திருப்பம்!

என் கணவருக்கு **53 வயது**, திடீர் என்று **21 வயது** பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டு திருமணம் வரைக்கும் விஷியம் முற்றியது பெண்வீட்டாரும் சம்மதித்துவிட்டனர் யார் எது சொல்லியும் கேட்காமல்—**திருமணம் செய்து கொள்ள போகும் பெண்ணிற்கு நகைகள், பட்டுபுடவைகள் ஆகியவற்றை எல்லாம் வாங்கி கொடுத்து,** கடந்த **தைமாதம் 1997ல்** திருமணம் செய்து கொள்ள சகல ஏற்பாடும் செய்த நிலையில்—தான்.

திரு ஆர்.பி—ஹரி அவர்களை பற்றி கேள்விபட்டு, அவரை சந்தித்தேன் சில பிரார்த்தனை முறைகளை செய்யும்படி கூறினார்— (திருமணத்திற்கு ஒரு வாரமே இருந்த நிலையில்) ஆவிகள் மூலமாக இத்திருமணத்தை நிறுத்தி விடுவதாக கூறினார். அதன்படியே—திடீர் என்று சூழ்நிலை மாறியது. திருமணமும் நின்று போனது.

**கஸ்தூரி,**
**18/1/A-புஷ்பவதி அம்மாள் தெரு,**
**வெஸ்ட் மாம்பலம், சென்னை-33**

# எச்சரிக்கையை மீறியதால்—எய்ட்ஸ்!

1993ல், சேலம், E.B யுனியன் தலைவர் அஷோக்குமார் அவர்களின் ஜாதகத்தை பார்த்து, எதிர்காலம் மிக பிரமாதமாக உள்ளது அரசியலில் பெரும்புள்ளியாக வர வாய்ப்புண்டு என்று கூறிய திரு R.P.ஹரி.

ஜாதகத்தில் சில விஷயங்கள் மட்டும் சாதகமாக இல்லை அதற்கான பரிகாரங்கள் மட்டும் செய்துவிட்டால் போதும் மற்றபடி பயப்படும்படி ஏதும் இல்லை என்று கூறினார்.

தனக்கு பரிகாரங்கள் மீது நம்பிக்கை இல்லை—என்று திரு அஷோக்குமார் தெரிவித்ததும்.

விஷியத்தை மெதுவாக வெளிப்படுத்தினார் - R.P. ஹரி.

உங்களுக்கு 35 வயதில்-(1996ல் )உயிருக்கு ஆபத்தான கண்டம் உண்டு. சிற்றின்ப வியாதிகளால் தாக்கப்பட்டு உயிரை இழப்பீர்கள் என்று கூறி, தவறான பெண் தொடர்புகளை தவிர்கும்படி கூறினார்.

மூன்று வருடம் கழிந்தது.

1996ல் அடிக்கடி உடல்நலம் பாதிக்கபடவே—டாக்டர்கள் திரு அஷோக்குமாரின் [illegible]ப் பரிசோதித்து பார்த்தார்கள்.

ரிசல்ட்—அதிர்ச்சியளித்தது! ஆம் இரத்ததில் HIV பாசிட்டிவ் (AIDS) காணபட்டது. பின் நடந்த சம்பவங்கள் மனதை பாதிக்கக் கூடியதே!

ஜனவரி 1997ல் அவருடைய சகோதரர்—சேலத்திலிருந்து சென்னைக்கு வந்து, திரு ஆர்.பி ஹரி அவர்களிடம் மீண்டும் அஷோக்குமாரின் ஜாதகத்தை காண்பித்தார்.

பரிகாரம் செய்ய வேண்டிய காலம் கடந்துவிட்டதால் 8-Feb 1997ல் மரணம் சம்பவிக்கும் என்று கூறி வருத்தபட்டார் R.P.ஹரி. அதன்படியே.. 8 Feb 1997—ல் அஷோக்குமாரின் உயிர் பிரிந்தது.

கடைசி தருணம் வரையில்—ஆர்.பி.ஹரி எழுதி கொடுத்த ஜாதகத்தை கைகளில் வைத்து கொண்டு...எச்சரிக்கையை

மீறி விட்டோமே – என்ற ஆதங்கத்துடன்

நலம் விசாரிக்க வருபவர்களிடமெல்லாம் என் விதி எனக்கு முன்பே தெரிஞ்சும்,... நான் தவறு செய்து விட்டேனே என்று கதறி அழுதது பரிதாபமாக இருந்தது.

ஜாதக புத்தகத்தை – அடிக்கடி எடுத்து பார்த்து கொண்டும், தலையணைக்கு அடியில் ஜாதகத்தை வைத்துக் கொண்டும்...

நல்ல எதிர்காலத்தை பரிகாரம் செய்யாத காரணத்தால் இழந்து விட்டோமே... என்ற பரிதவிப்புடன் 8 பிப்ரவரி 1997ல் உயிர் விட்டது.... மனதை ரொம்பவும் பாதித்தது.

சேலம் E.B. யூனியன் தலைவர்
Late S.Ashok Kumar
S/o. P.S. Nair
D-85, Narayana Pillai Street,
Peramanur, Salem - 7
Pin : 636007

கிரகங்களின் சங்கேதமான – எச்சரிக்கையை மீறுவது ஆபத்தாகும்.

பொதுவாக – ஜாதகம் பார்ப்பவர்கள் அனைவரிடமும் அவர்கள் ஜாதகப்படியான எச்சரிக்கையை கூறி, தீய பலனை தவிர்க்க பரிகாரம் செய்யும்படி கூறுவது வழக்கம்..! பலர் ஏனோ இதை அலட்சியப்படுத்தி விடுகிறார்கள். வசதியுடன் வாழும்பொழுது – பரிகாரம் செய்ய மனம் வராது.

வசதி குறைந்தவுடன்... ஐய்யோ பரிகாரம் செய்ய பணவசதி இல்லையே என்று வருபவர்கள் தான் அதிகம்

ஆக...

யார் – யார் பரிகாரம் செய்து, நல்ல நிலைக்கு வருவார்கள் என்று முன்கூட்டி அறிந்தே பரிகாரம் பற்றி கூறுகிறேன்.

மற்றபடி

தீயபலன்களை சொல்லாமலேயே அப்பிரச்சனைகள் பாதிக் காதபடி பார்த்து கொள்வதில் தான் நான் அதிகம் கவனம் செலுத்துகிறேன்.

காரணம்?

★ **தீய பலன்கள் உள்மனதில் பதிந்து விட்டால் அது நடந்துவிட வாய்ப்புகள் அதிகம். மற்றபடி..**

★ **பரிகாரங்கள் செய்வதைபற்றி-நம்பிக்கை இல்லா தவர்களுக்கும் (அதிர்ஷ்ட மில்லாதவர்களுக்கும்) நான் ரிகாரம் செய்யும் படி ஆலோசனை கூறுவதில்லை**

★ **பரிகாரங்கள் செய்யுங்கள் என்று- கேட்பவர்களுக்கு மட்டுமே (நல்ல நேரம் நெருங்கி விட்டது) பரிகாரங்கள் செய்து கொடுப்பது வழக்கம்.**

ஒரு சிலருக்கு-பரிகாரங்கள் செய்ய கூடிய காலம் கடந்து விடுவதால்-உதவ முடியாமல் போய்விடும்.

டாக்டரை சந்திக்கும் நேரமே-சிகிச்சைக்கு உகந்த நேரம் என்பது போல்-

ஜோதிடரை சந்திக்கும் காலமே-பரிகாரங்கள் செய்வதற்கும் உகந்த நேரமாகும். விதி இப்படிதான் செயல்படுகிறது.

## உங்கள் வாழ்க்கையிலும் அதிர்ஷ்ட காற்று வீச வேண்டுமா?

கடன் பிரச்சனையால்... தூக்க மாத்திரைகளை சாப்பிட்டு, குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்த நான்-வடபழனி கோவிலில் "**உங்கள் தலை எழுத்து-விதி மாற வேண்டுமா?** என்ற புத்தகத்தை கண்டதும்.

உடனே வாங்கினேன்.

புத்தகத்தை படித்ததும் - நமக்கு ஏதாவது ஒரு விடிவு காலம் பிறக்காதா? என்று மறு நாளே திரு.ஆர்.பி. ஹரி அவர்களை சந்தித்தேன்-